மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1996-97 ஆம் ஆண்டில் பொய்கை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

89--

அறிவியல் கல்லூரி ஆரம்பித்தல்

*1306--**திரு எஸ்.கே. வேதரத்தினம் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வேதாரண்யம் பகுதியில் அறிவியல் கல்லூரி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எஸ்.கே. வேதரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எங்களுடைய வேதாரண்யம் பகுதியில் கல்லூரி இல்லாத காரணத்தினால், சுமார் 75 கிலோ மீட்டர் தூரமுள்ள திருவாரூர் அல்லது மன்னார்குடி போன்ற பகுதிகளுக்குச் சென்று படிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. அந்தப் பகுதியிலுள்ள மக்களெல்லாம் விவசாயக் கூலிகள் ஆவார்கள். அதனால் அவர்களுடைய துயர் துடைக்கிற வகையிலே அந்தப் பகுதியிலே ஒரு கல்லூரியை அமைக்க இந்த அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவரவர்களே, கடந்த ஏழெட்டு ஆண்டுக் காலமாகவே அரசு நிதிநிலை நெருக்கடி காரணமாக பொதுவாக புதிய அரசு கலைக் கல்லூரிகள் ஏதும் தொடங்குவது இல்லை என்ற நிலையே இருக்கிறது. ஆனால்,

1996 ஆகஸ்ட் 6]

அரசின் நிதியுதவி தேவைப்படாத தனியார் கல்லூரிகள் தொடங்க, சில நிபந்தனைகளுடன் அரசு அனுமதிக்கிறது. அப்படிப்பட்ட கருத்துரு அந்தப் பகுதியிலே உள்ள தகுந்தவர்களிடமிருந்து வருமானால் அவை அரசு விதிகளின்படி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண்கள் 90 மற்றும் 91 நாளைக்கு எடுக்கப்படும். வினா எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

92--

வறட்சிப் பகுதிகளை அறிவித்தல்

66*--திரு. பி. வெங்கடசாமி :**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஒசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை வட்டங்களை வறட்சிப் பகுதியாக அறிவிக்க கருத்துரு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

93--

பழம் பதனிடும் தொழிற்சாலை

2261*--திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன் :**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--